உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கு நம்முடைய அரசு முனைந்து நடவடிக்கை எடுக்கிறபோது, இந்தத் தொகுதிக்கு முன் உரிமை கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர்களே, தாட்கோ நிதியுதவியோடு ஒரு சங்கத்தை அமைத்து அங்கே பாலிதின் பைகளைத் தயாரிக்க வேண்டுமென்று சொல்லி அசிஸ்டென்ட் டைரக்டர் அவர்கள் இயக்குநருக்கு ஒரு செயற் குறிப்பை அனுப்பினார். இப்போது இருக்கிற நிலைமையில் பாலிதின் பைகள் உற்பத்தி செய்யக் கூடிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறக்குறைய 16, தமிழ் நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த 16 சங்கங்களுக்கும் குறிப்பிட்ட அளவிற்குத்தான் ஆர்டர்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதிகப்படியான ஆர்டர்கள் கிடைக்கவில்லை. தற்போது அதே தாட்கோ நிதியுதவியோடு திருச்சி மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் பாலிதீன் பைகளைத் தயாரிக்கிற தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற செயற் குறிப்பு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 16 இடங்களுக்கு அதிகமான வழங்கல் ஆணை அதாவது ஆர்டர்கள் கிடைக்கவில்லை. கூடுதலாகக் கிடைக்கிறபோது நிச்சயமாக கரம்பக்குடியில் புதிய சங்கம் அமைத்து அவற்றை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோமுகி அணை மலைவாசி அரசினர் உயர்நிலைப் பள்ளி.

17—(*வினா எண். 3994)-திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோமுகி அணையிலுள்ள மலைவாசி அரசினர் உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1986 நவம்பர் 14]

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, கேள்விக்கு இடமில்லையென்று சொன்னார்கள். அது வருத்தத்திற்குரிய ஒன்று. இருந்தாலும் கல்வராயன் மலைப்பகுதியில் இருக்கக் கூடிய ஒரே ஒரு அரசு உயர்நிலைப்பள்ளி இதுதான். அந்த மலைவாழ் மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று படிக்கக் கூடிய வசதியில்லாத காரணத்தால்தான் அந்தப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதைக் கொடுத்திருந்தார்கள். ஆகவே கேள்விக்கு இடமில்லை என்று சொன்னதற்கு வருத்தம் தெரிவித்து, அடுத்த ஆண்டு, அதாவது வருகிற ஆண்டிலாவது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து அந்தப் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதற்கு நிரந்தரமான கட்டடம் கிடையாது. கோமுகி அணை கட்டுகிறபோது குவார்ட்டர்ஸ் கட்டினார்கள். அந்த குவார்ட்டர்ஸ் கட்டடத்தில்தான் ஹாஸ்டலும், பள்ளியும் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே நிரந்தரமான கட்டடமும் மற்றும் அங்கே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு விடுதியும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்த ஆண்டும் இல்லாத அளவில் 1986–87 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 21 நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாகவும், ஒரு பழங்குடி மாணவர்கள் உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்தி இருக்கிறோம். இந்த ஆண்டு அதற்காகச் செலவு செய்தது 40 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு மற்றும் வருகிற ஆண்டு இரண்டிற்கும் சேர்த்து 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல பழங்குடி மக்களின் நலன் காக்கிற அரசாகத்தான் இதயதெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சி எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு இப்படிப்பட்ட நல்ல திட்டத்தின் வாயிலாக ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு உதவுகிற வகையில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குகிற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. கோமுகி அணையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற பள்ளிக்கூடத்தின் நிலையை அறிந்து மாவட்ட ஆதிதிராவிட அதிகாரி அவர்கள் செயல் குறிப்பினை அனுப்பி வைப்பார்களானால் வருகிற ஆண்டிலே இந்த அரசு நிதிநிலைக்கு ஏற்ப ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 961 பள்ளிகள் இருக்கின்றன. ஆண்டிற்காண்டு ஒவ்வொரு பள்ளிக் கூடத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே அந்தப் பள்ளியைப்

பொறுத்தவரையில் வருகிற ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆற்காடு நகராட்சியில் ''தாட்கோ'' மூலம் வீடுகள்

(18)—(வினா எண். 8870) *திரு. த. பழனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு நகராட்சிப் பகுதியில் (கஸ்பா) கொடுக்கப் பட்டுள்ள ஆதி திராவிட மக்களுக்கு '' தாட்கோ '' மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. த. பழனி : தலைவர் அவர்களே, நகர்ப்பகுதியிலே ஆதிதிராவிட மக்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அரசு நில ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறது. மிக வும் ஏழைகளாக இருக்கிற அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வீடுகளையும் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து நகர்ப் பகுதி மக்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனு மதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, கிராமப்புறத்தைப் பொறுத்தவரையில் ஆதி திராவிட மக்க ளுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் தாட்கோ மூலமாக ஆர். எல். இ. ஜி. பி. மற்றும் என். ஆர். இ. பி. திட்டங்கள் மூலமாக நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. ஆனால் நகரத்தைப் பொருத்தவரையில் அங்கேயிருக் கின்ற ஆதி திராவிட மக்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அங்கே இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக